இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 05-02-2024

ஜார்கண்டில் ஒரு சதிச்செயல்

ஜார்கண்டில் ஒரு ஜனநாயகப் படுகொலையை நடத்தி இருக்கிறது பா.ஜ.க. இது எதற்குமே தொடர்பு இல்லாதவரைப் போல இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி!

மக்களை நேரிய வழியில் சந்தித்து வாக்குகளைப் பெற முடியாத பா.ஜ.க., பல்வேறு மாநிலங்களில் குறுக்கு வழியில், கொள்ளைப்புறம் வழியாக ஆட்சியைப் பிடித்துள்ளதை அதிகம் விவரிக்கத் தேவையில்லை. நாடும் நாட்டு மக்களும் அறிந்தவை தான் அவை. கட்சிகளை உடைப்பது, எம்.எல்.ஏ.க்களை இழுப்பது அதன் மூலமாக பா.ஜ.க. ஆட்சியையோ, அல்லது பா.ஜ.க.வின் அடிமை ஆட்சியையோ அமைப்பது அவர்களது பாணியாகும். அதனைத் தான் ஜார்கண்டிலும் பார்க்க நினைத்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருகிறது. தனக்கு எதிரியே இல்லை என்ற இறுமாப்புடன் செயல்பட்டு வந்தது பா.ஜ.க. ஆனால் 'இந்தியா' என்ற வலுவான கூட்டணியை அமைத்து விட்டார்கள் எதிர்க்கட்சிகள். இதில் அகில இந்தியக் கட்சிகள், பல்வேறு மாநிலக் கட்சிகள் இடம் பெற்றுள்ளன. பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் இக்கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளன. 'இந்தியா' என்று கூட்டணிக்கு பேர் வைத்ததே பா.ஜ.க.வுக்கு திகிலைக் கிளப்பியது. 'இந்தியா' என்று சொல்லாமல், 'பாரதம்' என்று புலம்பத் தொடங்கினார்கள்.

அடுத்ததாக இந்தியாக் கூட்டணித் தலைவர்களை வேட்டையாடத் தொடங்கினார்கள். ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் டெல்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு சம்மன் மேல் சம்மனாக கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். டெல்லி கலால் கொள்கை வழக்கு தொடர்பாக முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இது வரை 5 முறை சம்மன் அனுப்பி இருக்கிறார்கள். 5 சம்மனையும் அரவிந்த் கெஜ்ரிவால் புறக்கணித்தார். அவரது ஆட்சியைக் கவிழ்க்கும் வேலைகளை பா.ஜ.க. தொடங்கி விட்டது. இதனை அரவிந்த் கெஜ்ரிவாலே ஊடகங்களில் அம்பலப்படுத்தினார்.

'ஆம் ஆத்மி கட்சியில் இருந்து வெளியேறவும், டெல்லியில் உள்ள ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைக் கவிழ்க்கவும் எங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஏழு பேருக்கு தலா 25 கோடி ரூபாய் தர பா.ஜ.க. பேரம் பேசி உள்ளது. ஆபரேஷன் தாமரை 2.0 என்ற திட்டத்தை தொடங்கி இருக்கிறார்கள்' என்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். இந்த எம்.எல்.ஏ.க்களின் பெயர்களை வெளியிடுங்கள் என்று அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார்கள். டெல்லி காவல் துறையின் குற்றப்பிரிவு போலீஸார், நோட்டீஸ் கொடுத்து இருக்கிறார்கள்.

பீகாரில் துணை முதலமைச்சராக இருந்த தேஜஸ்வியை பல்வேறு வகைகளில் நெருக்கி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும் ஜார்கண்ட் முதலமைச்சருமான ஹேமந்த் சோரனை வளைத்தார்கள்.

அரசு நிலங்களை தனியாருக்கு விற்றதான ஒரு வழக்கை அமலாக்கத்துறை மூலமாக தூசி தட்டி எடுத்து அவரை விசாரணைக்கு வருமாறு அழைத்தது அமலாக்கத்துறை. தன்னை எப்படியும் கைது செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து அவர் தனது முதலமைச்சர் பதவியை விட்டு விலகினார். ஹேமந்த் சோரனைக் கைது செய்து ஜார்கண்டில் முக்தி மோர்ச்சா ஆட்சியைக் கவிழ்ப்பது தான் பா.ஜ.க.வின் சதியாக இருந்தது. ஆனால் கட்சி உறுதியாக ஹேமந்த் பின்னால் நின்று விட்டது. ஹேமந்த் கைது செய்யப்பட்டதும் உடனே கூடிய முக்தி மோர்ச்சா கட்சி தனது அடுத்த முதலமைச்சராக சம்பாய் சோரனை தேர்ந்தெடுத்தது. ஆளுநரிடம் அதற்கான கடிதத்தை கொடுத்ததும், அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்க வேண்டும். முக்தி மோர்ச்சா கட்சி எம்.எல்.ஏ.க்களை உடைக்க முடியுமா என்று பார்த்தார்கள். அதனால் இழுத்தார்கள். ஆனால் எம்.எல்.ஏக்கள் யாரும் அணிமாறத் தயாராக இல்லை. வேறு வழியில்லாமல் சம்பாய் சோரனுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து விட்டார்கள்.

81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்கண்ட் சட்டசபையில் பெரும்பான்மைக்கு 41 உறுப்பினர்கள் தேவை. 43 உறுப்பினர்கள் ஒன்றாக இருப்பதாக வீடியோவை ஜார்கண்ட் முக்தி மோர்சா கட்சி வெளியிட்டது. கூட்டணியாக பார்த்தால் 48 உறுப்பினர்கள் ஆதரவு இந்த அரசுக்கு இருந்தது. ஆனாலும் உடனடியாக ஆட்சி அமைக்க இந்த கட்சியை அழைக்கவில்லை.

பீகாரில் நிதிஷ்குமார் பதவி விலகினார். 15 நிமிடங்களில் புதிய அமைச்சரவையை அமைக்கவும், அதற்கான உரிமை கோரவும் அனுமதிக்கப்பட்டார். இத்தனைக்கும் அவரது கட்சிக்கு பெரும்பான்மை கிடையாது. பா.ஜ.க. ஆதரவு தந்தால் பெரும்பான்மை ஆகும். ஆனால் ஜார்கண்டில் முக்தி மோர்சா கட்சி பெரும்பான்மை உள்ள கட்சி ஆகும். ஆனால் அவர்களது ஆட்சியை அமைக்க கால அவகாசகத்தை நீட்டித்து - பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத விளையாட்டுகளை விளையாட நேரம் கொடுத்தார் ஆளுநர். பா.ஜ.க. நினைத்தது நடக்கவில்லை. வேறு வழியின்றி சம்பாய் சோரனுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து விட்டார் ஆளுநர்.

ஜார்கண்ட் முதலமைச்சராக இருந்த நிலையில் ஹேமந்த் சோரனை பதவி விலக வைத்து அமலாக்கத்துறை மூலமாக கைது செய்ய வைத்திருப்பது மாபெரும் ஜனநாயகப் படுகொலை ஆகும். தாங்கள் ஏதோ ஊழலுக்கு எதிரானவர்கள் போலக் காட்டிக் கொள்கிறது பா.ஜ.க. மகாராஷ்டிராவில் 73 ஆயிரம் கோடி ஊழல் புகாரில் சிக்கிய அஜித் பவார், பா.ஜ.க. ஆதரவுடன் துணை முதலமைச்சராக இருக்கிறார். பா.ஜ.க.வில் சேர்ந்ததும் அவர் புனிதராகி விட்டார். இப்படித்தான் ஹேமந்த் சோரனையும் மிரட்டப் பார்க்கிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் நடந்து, பா.ஜ.க. ஆட்சி முடியும் வரை இது போன்ற சதிச்செயல்கள் நிறைய நடக்கும்.

●●

நீலகிரி தாவரவியல் பூங்காவில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகரிப்பு!

உதகை, ஜன. 5–

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள சுற்றுலாத் தலங்களை கண்டு ரசிக்க நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில், விடுமுறை நாளையொட்டி உதகைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வழக்கத்தை விடவும் அதிகரித்து காணப்படுகிறது. கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். தாவரவியல் பூங்காவில் கண்களை கவரும் டேலியா, பேன்சி, சால்வியா மலர்களை கண்டு ரசிக்கும் சுற்றுலாப் பயணிகள், தங்கள் குடும்பத்துடன் புகைப் படம் எடுத்து மகிழ்கின்றனர்.

மேலும், தாவரவியல் பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் பத்துக்கும் மேற்பட்ட நிறங்களில் பூத்துக் குலுங்கும் துலிப் மலர்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. திருவண்ணாமலை, ஆரணி மக்களவை தொகுதிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். அமைச்சர் எ.வ.வேலு, மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் சத்துணவு அமைப்பாளர் பணிகளில் கிராமப்புற பெண்களுக்கு முன்னுரிமை!

பெண்கள் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, பிப். 5-

திண்டுக்கல் மாவட்டத்தில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் பணியில் கிராமப்புற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று எஸ். பாறைப்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

பெண் சமுதாய முன்னேற்றத்திற்காக தொடர்ந்து நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் அரசு திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் எஸ். பாறைப்பட்டி ஊராட்சியில் குடிநீர் திட்ட பணிகளை துவக்கி வைத்துவிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கும் போது எஸ். பாறைப்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமத்தை சேர்ந்த பெண்கள் தங்களுக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். அவர்களின் கோரிக்கை மனுக்களை பெற்று அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கிராமப்புற பெண்கள் உயர்கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்பகுதியில் கூட்டுறவுத்துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் வருடத்திற்கு நூற்றுகணக்கான பட்டதாரிகள் உருவாகிறார்கள். இது போல அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு வழங்குவதால் கிராமங்கள் வளர்ச்சி அடைவதோடு கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகிறது என்றார். மேலும் விரைவில் தமிழகம் முழுவதும் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் பணிக்கான நியமனம் நடைபெற உள்ளது. இதில் குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் எம்.பி.ப.வேலுச்சாமி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், ஒன்றியகுழு உறுப்பினர்கள் காணிக்கைசாமி, செல்வி காங்கேயன், ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, லாரன்ஸ், ஒன்றிய துணை பெருந்தலைவர் ஹேமலதா மணிண்டன், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் சகிலாராஜா, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜேஸ்வரி தங்கவேல், ஆத்தூர் ஜம்ருத் பேகம், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அக்கரைப்பட்டி லட்சுமி சக்திவேல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ்பெருமாள், தி.மு.க. மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைபட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய பொறியாளர் முருகபாண்டி, ராமநாதன், அரசு ஒப்பந்தகாரர்கள் செந்தில்குமார், விக்னேஷ், கெண்டையம்பட்டி செயலாளர் சாமிராஜ், பாறைப்பட்டி செயலாளர்கள்; மாயப்பன், பாண்டி, டாஸ்மாக் வடிவேலு உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு

சிவகங்கை மாவட்டத்தில் 27 கோவில்களில் சமபந்தி விருந்து!

அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் - தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, பிப். 5 -

சிவகங்கை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் 55வது ஆண்டுநினைவு தினத்தினை முன்னிட்டு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 27 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் பொது வழிபாடும் சமபந்தி விருந்தும் நடைபெற்றது. இதில் பிள்ளையார்பட்டியில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த சமபந்தி விருந்தில் சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் பழனிக்குமார் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கே.ஆர். வெள்ளையன் செட்டியார், ஆய்வாளர் பிச்சு மணி, ஒன்றிய கழகச் செயலாளர்கள். எஸ்.சண்முகவடிவேலு, கே.எஸ். ஆனந்த்,பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகில ராணி நாராயணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், முன்னாள் ஊராட்சி தலைவர் வெள்ளைச்சாமி, மாணவ ராணி ராஜேஷ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். பிள்ளையார்பட்டி கோயில் நிர்வாகத்தின் சார்பில் சிறப்பு வழிபாடுசமபந்தி விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மடப்புரம் திருப்புவனம் தாலுகாமடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலில் திருமதி தமிழரசி ரவிக்குமார், எம். எல். ஏ. தலைமையில் சிறப்புபொது வழிபாடு மற்றும் சமபந்தி விருந்து நடைபெற்றது. இதில் இந்து சமய அறநிலைத் துறை உதவி ஆணையர் செல்வராஜ், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் கடம்பசாமி, வசந்தி சேங்கைமாறன், பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி, நிர்வாகிகள் அண்ணாமலை, சேகர், ஈஸ்வரன், பாண்டி கிருஷ்ணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இதே போல் மாவட்டத்தில் சிவகங்கை விஸ்வநாத ஸ்வாமி திருக்கோயில், கொல்லங்குடி வெட்டுடையார் வெட்டுடையார் காளியம்மன் கோயில் தாய்மங்கலம் முத்துமாரியம்மன் திருக்கோயில் உள்பட மாவட்டத்தில் 27 திருக்கோயிலில் பொது வழிபாடு சமபந்தி விருந்தும் நடைபெற்றது. ஏற்பாடுகளை இந்து சமய அறநிலைத் துறை அலுவலர்கள் செய்திருந்தார்கள்.

தூத்துக்குடிக்கு - இன்று

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் பி.கீதாஜீவன் - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப். 5 -

தி.மு.க நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு இன்று தூத்துக்குடி வருகை தருவதால் பொது நலனில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர்கள் திருமதி.பி.கீதாஜீவன், அனிதா.ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2024 ல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். குழுவின் உறுப்பினர்களாக டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.இராஜா, கோ.வி.செழியன்.எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன்.எம்.எல்.ஏ., கே.ஆர்.என்.ராஜேஸ்குமார்.எம்.பி., எம்.எம்.அப்துல்லா.எம்.பி., திருமதி.பிரியா டாக்டர். எழிலன் நாகநாதன்.எம்.எல்.ஏ., சென்னை மேயர் ஆகியோர் உள்ளனர்.

இந்த தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் நேரில் சென்று பல்வேறு தரப்பட்ட மக்களை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதன்படி தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதிக்கு இன்று (05.02.2024 - திங்கள் கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலை, காமராஜ் கல்லூரி எதிரில் உள்ள மாணிக்கம் மஹாலில் கோரிக்கை மனுக்களை பெற இருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பட்ட தொழில் முனைவோர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், மருத்துவர்கள், மீனவர்கள், மாணவர் சங்கங்கள், தொழிலாளர் நல பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

வருகை தரும் அனைவரும் தங்கள் கருத்துக்களை மனுவாக எழுதிக் கொண்டு வரவும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.